DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT NO.I, CHIDAMBARAM.
**Present:Selvi.M. Mayadevi,B.A., L.L.B.,**
**Judicial Magistrate No.I, Chidambaram.**

| | |
|---|---|
| Case No. | CMP.No. 2685/2025 |
| Sworn Statement | PW:2 - 223 BNSS |
| Name: | திரு.சிவசுப்பிரமணியன் |
| Father's /Husband Name: | த.பெ. திருஞானசம்பந்தம் |
| Village: | முத்தையாநகர் |
| Age: | |
| **Solemnly Affirmed in accordance with the Provision Act The Oaths Act 1969(Act.44/1969) of the day of 21.08.2025** | |

**முதல் விசாரணை:**

மனுதாரரர் என் பக்கத்து வீட்டுக்காரர். கிருஷ்டன், த-பெ , கிருபாகரன் என்பவர் பொது வழியை ஆக்கிரமித்து சுற்றுசுவர் கட்டியது சம்பந்தமாக கிருஷ்டன் மீது அண்ணாமலை நகர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். அதன் முன்விரோதம் காரணமாக கடந்த 22.06.2025 நான் என் வீட்டில் இருந்த போது வீட்டிற்கு வெளியே சத்தம் கேட்டது. நான் வெளியே சென்று பார்த்தபோது பக்கத்தில் வீட்டில் வசிக்கும் கிருஷ்டன் என்பவர் மனுதாரர் வீட்டுக்கருகில் நின்று கொண்டு அவரை பார்த்து தேவிடியா மகனே, நீ என்ன பெரிய ஆளா, வெளியே வாடா நாய் என்று அசிங்கமாக பேசி உன்னை வீட்டில் இருக்க விடமாட்டேன் என்று சொல்லி மண்வெட்டியை எடுத்துக் கொண்டு வந்து மனுதாரரை தாக்கினார். மனுதாரரின் வலது கையில் அடிப்பட்டு ரத்தம் வந்தது, அப்போது சாமுவேல் மகன் கிருபாகரன் என்பவர் மனுதாரர் வீட்டு வாசலில் காரை வைத்து மறைத்து அவரை செல்ல விடாமல் தடுத்து அசிங்கமான வார்த்தைகளால் பேசினார். மேலும் அவர் உருட்டுக்கட்டை எடுத்து வந்து கழுத்து , முகம், முதுகு, வயிற்று பகுதியில் அடித்து காயம் ஏற்படுத்தினார். சத்தம் கேட்டு எனது பக்கத்து வீட்டில் இருந்த விக்னேஷ், நானும் சண்டையை விலக்கிவிட்டோம். அதனால் கிருஷ்டன் தன் கையில் வைத்திருந்த மண்வெட்டியை காட்டி என்னைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி மிரட்டி விட்டு சென்றார். மனுதாரர் வலி தாங்க முடியாமல் இருந்ததால் நான் சிதம்பரம் ஓபிக்கு மனுதாரரை சிகிச்சைக்கு அழைத்து சென்றேன். 25.06.2025 அண்ணாமலை நகர் காவல்நிலையத்திற்கு சென்று மனுதாரர் இதுகுறித்து புகார் அளித்தார்.

மேற்படி காவல்நிலையத்தார் மனுதாரரின் புகாரை பெற்றுக் கொண்டு விசாரிப்பதாக கூறி அனுப்பினார்கள். ஆனால் விசாரணை எதுவும் செய்யாத காரணத்தினால் மனுதாரர் நீதிமன்றத்தில் தனி புகார் அளித்துள்ளார். நான் சம்பவத்தை பார்த்தால் மனுதாரர் சாட்சி -2 சாட்சியம் அளிக்கிறேன்.

Taken down by me in open Court in the presence of the accused read over of the witness and Admitted by him/her to by correct.

(Sd/-Selvi.M. Mayadevi,)
J.M.No.I, Chidambaram